**C.C. No. 154/2022** **25.07.2023**

**PW1 சண்முகம்**

**ம.சா.1 திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) எனக்கு சொந்த ஊர் கண்டனூர். எதிரி கரியபட்டி அருகே உள்ள மருதங்குடி ஊரைச் சேர்ந்தவர். எதிரிக்கும், எனக்கும் நல்ல பழக்கம் என்று எனது புகார் மனுவிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். எனது வழக்கறிஞர் அறிவிப்பில் எதிரிக்கும் எனக்கும் எனது நண்பர் மூலம் நல்ல பழக்கம் என்று குறிப்பிட்டிருக்கிறேன் என்றால் சரிதான். அதில் குறிப்பிட்டுள்ள நண்பர், யார் என்றும், அவரது முகவரியும், அவர் ஆணா, பெண்ணா என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரியும், நானும் உறவினர்களா என்றால் இல்லை. நான் விவசாயம் மற்றும் ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறேன். விவசாயம் 20 ஆண்டுகளாகவும், ரியல் எஸ்டேட் தொழில் 10 ஆண்டுகளாகவும் செய்கிறேன். ரியல் எஸ்டேட் அலுவலகம் வைத்துள்ளேனா என்றால் இல்லை.

2) நான் வருமான வரி செலுத்துகிறேனா என்றால் செலுத்தவில்லை. எதிரியை எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் தெரியாது, அவரது நண்பர் மூலம் எதிரி எனக்கு பழக்கம். அவசர தேவைக்காக கடன் கொடுத்ததாக புகாரில் சொல்லியிருக்கிறேன், என்ன அவசர தேவை என்றால் அவசர தேவை என்று சொன்னார். என்னை எதிரிக்கு யாரென்றே தெரியாது என்றால் சரியல்ல. எதிரிக்கு எந்த நண்பர் மூலமும் என்னை பழக்கம் இல்லை என்றால் சரியல்ல. எதிரி என்ன வேலை செய்கிறார் என்றால் தெரியாது. ரூ.2,50,000/- பணம் வாங்கும் அளவிற்கு எதிரிக்கு எந்த தேவையும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. கடந்த 13 ஆண்டுகளாக எதிரி 100 நாள் வேலைத் திட்டத்தில் தினக்கூலியாக வேலை செய்கிறார் என்றால் அது பற்றி தெரியாது, எதிரியின் கணவர் வேறு மாநிலத்தில் வேலை செய்து வருவதாக நண்பர் சொன்னதால் பணம் கொடுத்தேன்.

3) எதிரியின் கணவரிடம் எந்த காரணத்திற்காக எதிரி பணம் கேட்கிறார் என்று விசாரித்தேனா என்றால் நான் கேட்கவில்லை, பணம் கொடுத்தபிறகு, எதிரியுடன் எதிரியின் கணவரும் என்னை வந்து பார்த்தார். இதன் விவரத்தை எனது புகாரிலும், நிரூபண வாக்குமூலத்திலும், அறிவிப்பிலும் சொல்லியிருக்கிறேனா என்றால்

இல்லை. மாதம் ரூ.100/-க்கு ரூ.1/- வட்டிவீதம் தருவதாக ஒப்புக்கொண்டு கேட்பு கடனுறுதிச்சீட்டு எழுதிக்கொடுத்ததாக எனது புகாரில் கூறியிருக்கிறேன், அந்த கேட்பு கடனுறுதிச்சீட்டைத் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. கேட்பு கடனுறுதிச்சீட்டு எழுதிக்கொடுத்ததாக சொல்லும்போது யார் உடன் இருந்தார்கள் என்று சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. எதிரி என்னிடம் 01.03.2020 அன்று ரூ.2,50,000/- கடன் வாங்கவில்லை என்றாலும், அதற்காக எந்த கேட்பு கடனுறுதிச்சீட்டும் எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல, கேட்பு கடனுறுதிச்சீட்டைத் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன்.

4) கடன் கொடுத்த தேதியில் என்னிடம் ரூ.2,50,000/- இருந்ததற்கான ஆதாரத்தைத் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. எதிரிக்கு ரூ.2,50,000/- கடன் கொடுத்ததற்கு ஆதரவாக பொறுப்பிற்காக வேறு சொத்து குறித்த ஆவணம் எதுவும் எழுதி வாங்கினேனா என்றால் இல்லை, கடனுறுதிச்சீட்டு மட்டும் எழுதி வாங்கினேன். நான் சொல்வதுபோல், எதிரி கடனுறுதிச்சீட்டு எழுதி கொடுக்கவும் இல்லை, அந்த தேதியில் பணம் வாங்கவும் இல்லை என்றால் சரியல்ல. எனது வருமானத்தை நிரூபிப்பதற்கு வங்கி கணக்கு பட்டியலைத் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. நான் பி.காம் படித்துள்ளேன். எதிரி என்ன படித்துள்ளார் என தெரியுமா என்றால் தெரியாது.

5)என்னிடம் காண்பிக்கப்படும் ம.சா.ஆ.1 காசோலையில் உள்ள பெயர், எண்ணால், எழுத்தால் எழுதப்பட்ட தொகை மற்றும் எதிரியின் கையொப்பத்திற்கும் மை வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான். காசோலையில் capital letter-ல் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.2 ஆவணத்தில் ம.சா.ஆ.1 காசோலை insufficient funds and signature differs என்ற இரண்டு காரணங்களுக்காக திருப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது வழக்கறிஞர் அறிவிப்பு, புகார் மனு ஆகியவற்றில் போதிய பணமில்லை என்ற காரணத்திற்காக மட்டும் ம.சா.ஆ.1 காசோலை திருப்பப்பட்டதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். ம.சா.ஆ.1 காசோலையைப் பூர்த்தி செய்து கையொப்பமிட்டு எதிரி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி வழக்கறிஞர் அறிவிப்புக்கு பதிலறிவிப்பு கொடுத்தாரா என்றால் பதிலறிவிப்பு வழக்கு தாக்கல் செய்தபிறகு

தான் கிடைத்தது. 27.11.2022 அன்று எனது வழக்கறிஞருக்கு எதிரி பதிலறிவிப்பு கொடுத்து அது பெற்றுக்கொள்ளப்பட்டது என்றால் சரியல்ல.

6) அந்த பதிலறிவிப்பின் நகல் 05.06.2023 அன்று எனக்கு கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான். 25.05.2023 அன்று கூடுதல் பதிலறிவிப்பு எனது வழக்கறிஞருக்கும், எனக்கும் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த பதிலறிவிப்பில் குறிப்பிட்டுள்ள விவரங்களை படித்து தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். கண்டனூர் பாலையூரைச் சேர்ந்த ஆறுமுகம் மனைவி மஞ்சுளா என்பவரை தெரியுமா என்றால் தெரியும், அவர் எனது நண்பர், எதிரிக்கு உறவினர். மேற்படி மஞ்சுளா எதிரியின் உறவினர் மற்றும் எனது நண்பர் என்று அறிவிப்பு, புகார் ஆகியவற்றில் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி மஞ்சுளா முன்னால் வார்டு கவுன்சிலராக இருந்தார் என்றால் அது பற்றி தெரியாது, பின்பு தான் எனக்கு அவரை தெரியும்.

7) மேற்படி மஞ்சுளாவை எனக்கு 6 வருடங்களாக தெரியும். மேற்படி மஞ்சுளா மகளிர் சுய உதவிக்குழுவில் மூன்று குழுக்களுக்கு தலைவியாக இருந்தார் என்றும் அதில் எதிரி ஒரு உறுப்பினர் என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி மஞ்சுளா டிகிரி வரை படித்தவர், அவர் தலைவி என்ற அடிப்படையில் குழுக்கள் மூலமாக கண்டனூர் ஐசிஐசிஐ வங்கியில் எதிரிக்கு கணக்கு தொடங்கப்பட்டு, காசோலை புத்தகமும் மஞ்சுளா தான் வாங்கி கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி மஞ்சுளா என்னிடம் வரவு, செலவு செய்துள்ளார் என்றால் முன்பு வரவு, செலவு வைத்திருந்தார். எதிரியைத் தவிர வேறு யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் கண்டனூர் பாலையூரைச் சேர்ந்த மல்லிகா என்பவர் மீது ரூ.4,25,000/- க்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மஞ்சுளாவின் தாயாருடன் உடன் பிறந்த சகோதரி தான் மல்லிகா என்றால் அது பற்றி தெரியாது.

8) மஞ்சுளா, அவரது மகன் அசோக்குமார் மற்றும் பாக்கியலெட்சுமி, அவரது கணவர் ராமு, ரமேஷ், தேவகோட்டை பிரபுராஜ் ஆகியோர்கள் கூட்டாக சேர்ந்து கொள்ளையடித்த வழக்கு சாக்கோட்டை காவல்நிலைய குற்ற எண்.156/2021

சம்பந்தமாக மஞ்சுளாவின் Phone call list படி என்னை விசாரித்தார்களா என்றால் ஆமாம், விசாரித்தார்கள். மேற்படி மஞ்சுளா 27.02.2022 அன்று கடன் தொல்லை தாங்காமல், தற்கொலை செய்து கொண்டார் என்றால் இறந்தது தெரியும். மேற்படி இறப்பு சம்பந்தமாக சாக்கோட்டை காவல்நிலையத்தில் வழக்கு பதியப்பட்டது தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி மஞ்சுளா இறந்த பிறகு, மஞ்சுளா வசம் இருந்த எதிரியின் காசோலையைப் பயன்படுத்தி, எதிரி கடன் பெற்றதாக கூறி இவ்வழக்கைத் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

4) மேற்படி மஞ்சுளாவுடன் இருந்த வரவு, செலவுக்காக எதிரியின் காசோலையைத் தவறாக பயன்படுத்தியிருக்கிறேன் என்றால் சரியல்ல. திருப்பி செலுத்தக்கூடிய மறுபயனிற்காக வழக்கு காசோலையை என்னிடம் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும், எனக்கும் கொடுக்கல், வாங்கல் இல்லை என்றாலும் எதிரிக்கு என்னை யாரென்றே தெரியாது என்றாலும் மஞ்சுளாவிற்கும் எனக்கும் கொடுக்கல், வாங்கல் நிலுவையில் இருந்த நிலையில் மஞ்சுளா வசம் இருந்த எதிரியின் காசோலையை தவறாக பயன்படுத்தி நான் இவ்வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்.செல்வி.செ.ஜெயப்பிரதா, B.Sc.,B.L.,(Hon's)
விரைவுநீதிபதி, காரைக்குடி.